## SUBORDINATE COURT, PADMANABHAPURAM

**Case No.SC.No. 130/2019**

**Deposition of PW1 - சந்திர சேகர்**

**Date: 26.06.2024.**

**முதல் விசாரணை தொடர்ச்சி**

1) சம்பவத்தின் போது எதிரி பயன்படுத்திய அரிவாள் இது தான். அந்தஅரிவாள் சா.பொ.1.

2) சம்பவத்தின் போது ஆஜர் எதிரி வந்த வாகனம் என்னிடம் காட்டப்படுவது தான். TN 75 C 0290 டி.வி. எஸ். வேகோ இருசக்கர வாகனம் சா.பொ.2.

3) சம்பவம் நடக்கும் போது நாங்கள் சென்ற இருசக்கர வாகனத்தின் உடைந்த முகப்பு விளக்கின் பிளாஸ்டிக் துண்டு சா.பொ.3.

4) பின்பக்கம் பார்க்கக்கூடிய கண்ணாடியின் கவர் சா.பொ.4.

5) இன்டிகேட்டர் சா.பொ.5.

போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வீடு பெருஞ்சிலம்பில் உள்ள விலாப்புறத்தில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறும் இடத்திற்கும், எனது வீட்டிற்கும் இடையே ½ கி.மீ தூரம் இருக்கும். நான் மருத்துவரிடம் சம்பவம் எனது வீட்டின் அருகில் நடந்ததாக கூறினேன் என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. வேலை முடித்து நான் வீட்டிற்கு வருவதற்கு முன்னரே எதிரி என்னை வெட்டி விட்டார். தங்கநாடார் தோட்டத்திலிருந்து வேலை முடித்து வீட்டிற்கு 04.00 மணிக்கு வந்தேன். 04.15 மணிக்கு கடைக்கு போனேன். வெட்டுபட்ட பிறகு தான் எதிரி வீட்டிற்கு வந்து மிரட்டி விட்டு போன விபரத்தை என் மனைவி என்னிடம் சொன்னார். என் மகனையும் மிரட்டியதாகவும் நான் வெட்டுபட்ட பிறகு தான் என் மனைவி என்னிடம்

சொன்னார். 14.01.2018ம் தேதி மாலை 06.45 மணிக்கு என்னை வெட்டியதாக போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்தேன். ரவி ராஜசேகர்-ஐ தெரியும். இந்த வழக்கிற்கு முன்னர் எதிரி மீது கொடுத்த புகார்கள் அனைத்திலும் ரவி ராஜசேகரை சாட்சியாக போட்டுள்ளேன் என்றால் போலிசார் சாட்சியாக போட்டுள்ளார்கள். ஆண்டுபட்டிகை வழக்கு எண். 223/2023 வழக்கில் நான் புகார்தாரர், அந்த வழக்கிலும் ரவி ராஜசேகர் சாட்சி என்றால் சரிதான். எதிரி மீது 3 புகார்கள் கொடுத்து வழக்கு விடுதலை ஆகி விட்டது. சம்பவ நாளன்று மருத்துவமனைக்கு இரவு 10.30 மணிக்கு போனேன். வெட்டுப்பட்ட பிறகு வீட்டிற்கு சென்று விட்டு தான் நான் மருத்துவமனைக்கு போனேன். சம்பவ நாளன்று எதிரி 09.30 மணியளவில் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தார் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. இச்சம்பவத்திற்கு முன்னரே கொற்றிக்கோடு காவல் உதவி ஆய்வாளர் மற்றும் காவலர்கள் எதிரியை பிடித்து அடித்து உயிர் போகும் அளவு காயப்படுத்தி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்ட்டார் என்றால்அது பற்றி தெரியாது. எதிரி சார்பு ஆய்வாளர் மீதும், போலிசார் மீதும் வழக்கு போட்டுள்ளார். மேற்படி வழக்கிலிருந்து தப்பிப்தற்காக போலிசார் என்னை பயன்படுத்தி பொய் புகார் பெற்று வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. காயங்கள் என்னால் சுயமாக ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. எனது இடது கையில் ஏற்பட்ட காயம் வெட்டுக்காயம் தான். புகாரில் கையில் எந்த இடத்தில் வெட்டுக்காயம் ஏற்பட்டது என்று குறிப்பிட்டு கூறவில்லை. புகார் வாக்குமூலத்தை போலிசார் எழுதி தான் போனார்கள். குறிப்பு எடுத்து செல்லவில்லை. இடது கையில் உள்ள காயத்தை

தவிர வேறு எந்த காயத்திற்கும் நான் சிகிச்சை பெறவில்லை. மருத்துவரிடம் என்ன ஆயுதத்தால் தாக்கினார் என்று கூறவில்லை என்றால் மருத்துவர் கேட்கவில்லை. நான் சொல்லவில்லை. வீட்டிற்கு உருளைகிழங்கு வாங்கி கொண்டு வந்தேன். உருளைகிழங்கு இருசக்கர வாகனத்தின் முன்னால் இருந்தது. இருசக்கர வாகனத்தின் உடைந்த பாகங்கள் இருசக்கர வாகனம் கீழே விழுந்து உடைந்தது என்றால் சரியல்ல. எதிரி இருசக்கர வாகனத்தில் சென்று எந்த இடத்தில் போய் விழுந்தார் என்று எனக்குத் தெரியாது. நான் சொன்ன நேரத்தில் எதிரி என்னை வழிமறிக்கவோ வெட்டவோ இல்லை என்றால் சரியல்ல. கொற்றிக்கோடு போலிசார் எதிரி மீது போட்டஅனைத்து வழக்குகளிலும் நான் தான் புகார்தாரர். எதிரியை தாக்கி போலிஸ் காரர்களை காப்பாற்றுவதற்காக அவர்களின் தூண்டுதலினால் என்னால் ஏற்படுத்தப்பட்ட காயங்களை வைத்து எதிரி மீது போடப்பட்ட பொய் வழக்கு என்றால் சரியல்ல.